[14th November 1957

SRI M. JAGANNATHAN : On a point of order, Sir. நம் சட்ட சபை விதிகளின் 38-வது விதியின் பிரகாரம் ஒரு அமைச்சர் ஒரு உப கேள்விக்கு பதில் சொல்வதாய் இருந்தால், இரண்டு காரணங்களைக் காட்டி பதில் சொல்லாமல் இருக்கலாம். ஒன்று, தம் பதில் பொது நலத்திற்கு விரோதமாயிருக்கிறது, பப்ளிக் இன்டரஸ்டிற்கு விரோதமாயிருக்கிறது என்று பதில் சொல்லாமல் இருக்கலாம். மற்ற ஒன்று, முன் அறிக்கை இல்லாத காரணத்தால், பதில் சொல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்த இரண்டு காரணங்களையும் அமைச்சர் காட்டாமல் பதில் சொல்லாமல் உட்கார்ந்துவிட்டார்.

9-50 a.m. THE HON. SRI R. VENKATARAMAN : **I gave the answer.**

MR. SPEAKER : **There is no point of order. The Hon. Minister can answer in any way he likes.**

SRI T. S. RAMASWAMY PILLAI : ஸார், இவ்வாறு கூட்டுறவு மில்களை அமைப்பதற்கு ராஜ்ய அரசாங்கம் என்ன உதவி செய்கிறது. மத்திய அரசாங்கம் என்ன உதவி செய்கிறது என்பதை தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: இந்தக் கூட்டுறவு மில்களுக்கு செஸ் பண்ட் நிதியிலிருந்து மூலதன உதவியாக கொடுக்கப்பட்டு வருகிறது, செஸ் பண்டிலிருந்து மாகாண சர்க்காருக்கு கொடுக்கப்பட்டு பின் மாகாண சர்க்கார் கூட்டுறவு ஸொஸைட்டி மூலம் 20 வருஷ தவணைகளாக கடன்களை கொடுத்துவருகின்றனர்.

MR. SPEAKER : Questions are over.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *re.* MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House that I have received the following message, dated 13th November 1957, from the Governor of Madras :—

"In pursuance of Article 207, Clause (1) read with Article 199, Clause (1), sub-clauses (*a*) and (*g*) of the Constitution of India, I, P. V. Rajamannar, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax and the Madras Medium Cotton Mill Cloth (Sales Tax) (Amendment) Bill, 1957."

III.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *re.* PREVALENCE OF SMALLPOX AND CHOLERA IN NORTH ARCOT DISTRICT.

MR. SPEAKER : I have received notice of a motion under Rule 40 of the Assembly Rules from hon. Member Sri A. E. Chandrasekhara Nayagar calling the attention of the Hon. the Minister for Revenue to a matter of urgent public importance, viz., prevalence of cholera and smallpox in North Arcot district and the preventive steps taken by the Government. Sri A. E. Chandrasekhara Nayagar may now speak.

SRI A. E. CHANDRASEKHARA NAYAGAR : கனம் சபாநாயகர் அவர்களே, வட ஆற்காடு ஜில்லாவில் பூராவும் பரவலாக பெரிய அம்மை நோய்வந்து பரவியிருக்கிறது. காலராவும் பரவி வருகிறது. அதனால் வட ஆற்காடு நகரத்தில் மாத்திரம் அம்மை நோயின் காரணமாக 20 பேர்